பக்கங்கள் - 12
விலை - ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 248

சனிக்கிழமை
01 ஒகஸ்ட் 2026

ஆடி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057




உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுக்கு உடந்தை

# பூஜித, ஹேமசிறி இருவருக்கும் மரண தண்டனை

கொழும்பு மேல் நீதிமன்றம் அதிரடி

**கொழும்பு, ஒகஸ்ட் 1**

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணையில், முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ இருவருக்கும் மரண தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. »10

இழப்பீடுகளை வழங்கி

## நிலங்களைக் கைப்பற்ற அரசாங்கம் பெரும் சதி!

வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழு சாடல்

யாழ்ப்பாணம், ஓக. 1
இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ள நிலங்களுக்கு இழப்பீடு வழங்கும் சதி முயற்சியை அரசின் ஏவுதலுடன் சில அரச அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர் என்று வலி. வடக்கு மீள் குடியேற்ற »10

## முல்லைத்தீவு, கிளிநொச்சியில் மிகவிரைவில் காணி விடுவிப்பு!

பிரதியமைச்சர் அருண வாக்குறுதி

முல்லைத்தீவு, ஓக. 1
முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல், கேப்பாபிலவு உள்ளிட்ட பகுதிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் சில இடங்களிலும் மிக விரைவில் காணி விடு »11

## இராணுவத் தளபதியாக நிலந்த பிரேமரத்ன

கொழும்பு, ஓக. 1
இலங்கை இராணுவத்தின் புதிய தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் நிலந்த பிரேமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜென »10

சுதுமலை அம்மன் கோவிலில்

## அனுமதியற்ற கட்டுமானங்களை இடிக்கக்கோரிய மனு தள்ளுபடி

மேல் நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஓக. 1
சுதுமலை அம்மன் கோவில் திருப்பணி வேலைகள் இடைநிறுத்தப்பட்டு, இதுவரை இடம்பெற்ற கட்டுமானப் பணிகள் இடித்தழிக்கப்பட வேண்டும் என்று கோரிய வழக்கை வடமாகாண மேல் நீதிமன் »11

பணி நியமனம் ரத்துச் செய்யப்பட்ட

## 389 சுகாதாரப் பணியாளர்களின் முழுத் தகவலையும் வழங்கிடுக

மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஓக. 1
வடமாகாண சுகாதரப்பணி உதவியாளர்களாக நியமனம் வழங்கப்பட்டு, பின்னர் அந்த நியமனங்கள் ரத்துச் செய்யப்பட்ட 389 பேரினதும் முழுமையான »11

## நீதிபதிகளின் ஓய்வு வயதை நீடிப்பதில் மாற்றம் இல்லை

அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 1
நீதிபதிகளின் ஓய்வு வயதை நீடிப்பதில் எவ்வித மாற்றமும் இல்லை. அரசாங்கத்தின் நிலைப்பாட்டிலேயே மக்களும் உள்ளனர் - இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரி »10

## எரிபொருள் விலையில் மாற்றம் எதுவுமில்லை!

கொழும்பு, ஓக. 1
எரிபொருள் விலையில் இந்த மாதம் மாற்றம் எதுவும் இருக்காது என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜே.டி.ராஜகருணா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- »11

## ஊடகப் படுகொலைகளுக்கு துரிதமாக நீதியை வழங்குக

யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக ஊடகவியலாளர்கள் நேற்றுப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஓக. 1
உதயன் உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள், கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் தீர்க்கமான விசாரணைகள் நடத்தப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் - இவ்வாறு வலி »11

## மோ.சைக்கிள் விபத்து ஒருவர் பரிதாபச் சாவு!

புளியங்குளத்தில் சோகம்



வவுனியா, ஓக. 1
வவுனியா புளியங்குளம் பகுதியில், சொகுசுப் பேருந்தும் மோட்டார்சைக்கிளும் மோதி விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். »10



முச்சந்தி முராரி

"தினை விதைச்சவன் தினை அறுப்பான் எண்டமாதிரி வினை விதைச்சால் வினையைத்தான் அறுக்கோணும் கண்டியளோ"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உயிரைப் பறித்த அதிவேகம்

கொழும்பு, ஓக.1
கட்டான பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் கடந்த புதன் ழமை இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் 2 இளைஞர்கள் பரிதாபமாக உயிரிழந் துள்ள னர். கன் டெய்னர் முனை யத்துக்குள் பின்னோக் கிச் செலுத்தப் பட்ட வாகனத்து டன் அதி வேக மாக வந்த 2 மோட்டார் சைக் கிள்கள் அடுத்த டுத்து மோதி விபத்துக் குள்ளானது. மோதிய வேகத் தில் சம்பவ இடத் திலேயே இரு இளைஞர்களும் உயிரிழந்தனர்.

## 'மெட்ரோ' பஸ்கள் முதல் சேவை செப்ரெம்பர்

இலங் கைக்கு இறக் குமதி செய்யப் பட்டுள்ள 104 புதிய 'மெட்ரோ' பேருந்துகள் எதிர்வரும் செப் ரெம்பர் மாதம் முதல் பயணி கள்போக்குவரத் தில் ஈடுபடுத்தப் படவுள்ளன. ராகமை முதல் பத்தரமுல்ல வரை யிலான வழித் தடங்களில் இவை சேவை யில் ஈடு படுத்தப்படும்.

(சு-44)

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 31.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4507 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 10 44 56 75 |
| விசேட எழுத்து | Y |

### ஹந்தஹண ராசி சுப பலன்

| | |
|---|---|
| திகதி | 31.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1574 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 07 11 52 53 |

### NLB ஜய

| | |
|---|---|
| திகதி | 31.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0533 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 2 4 2 8 |

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 31.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2613 |
| ஆங்கில எழுத்து | H |
| சுப்பர் இலக்கம் | 05 |
| வெற்றி இலக்கங்கள் | 21 30 69 80 |

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 31.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6265 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 7 7 6 8 5 4 |

### தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 31.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2295 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 14 23 63 80 |
| விசேட எழுத்து | V |

### சுப தவசக்

| | |
|---|---|
| திகதி | 31.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0381 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 39 46 66 |

## 31 ஆம் நாள் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 22 . 07 . 1948



மறைவு 02 . 07 . 2026

கடந்த 02.07.2026 வியாழக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்.

**அமரர் கந்தையா கருணானந்தமூர்த்தி**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (01.08.2026) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

86/8 சம்பியன் லேன், கொக்குவில்.
0774323832 (CS/61993) J-1 கொழும்பு எசன்ஸ் கவுஸ்

### சுபிரி தன சம்பத

| | |
|---|---|
| திகதி | 31.07.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0973 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 9 6 4 4 2 1 |

### Super Ball

| | |
|---|---|
| திகதி | 31.07.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3239 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 29 37 54 56 |

### சனிதா

| | |
|---|---|
| திகதி | 31.07.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 50 65 69 70 |
| வெற்றி வாரம் | 5400 |

### SASIRI

| | |
|---|---|
| திகதி | 31.07.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 1069 |
| வெற்றி இலக்கம் | 20 22 41 |

### லக்ன ராசி

| | |
|---|---|
| திகதி | 31.07.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ராசி | கன்னி |
| வெற்றி இலக்கம் | 09 32 48 55 |
| சீட்டிழுப்பு வாரம் | 4951 |

### KAPRUKA

| | |
|---|---|
| திகதி | 31.07.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | G |
| சுப்பர் இலக்கம் | 01 |
| வெற்றி இலக்கம் | 01 30 36 45 |
| வெற்றி வாரம் | 2415 |

### அத கோடிபதி

| | |
|---|---|
| திகதி | 31.07.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கம் | 48 58 59 76 |
| வெற்றி வாரம் | 3065 |





# இலங்கையில் மிகப்பெரிய 60 அடி இயேசு சிலை திறப்பு

கொழும்பு, ஓக.1
இலங்கையிலேயே மிக உயரமான 60 அடி உயரமான இயேசுக் கிறிஸ்துவின் பிரம்மாண்டமான திருவுருவச்சிலை சீதுவையில் அமைந் துள்ள 'சுபுவன் அரண' ஆன்மிக மைய வளாகத்தில் நிறுவப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது.
கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் ஆசீர்வதிக்கப்பட்டு பொதுமக்களின் வழிபாட்டுக்காக கையளிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சிலை வெண் இரும்பு கொண்டு மிகவும் பிரம்மாண்டமாக உருவாக்கப்பட்டுள்ளது.
நிகழ்வில் கத்தோலிக்கக் குருக்கள், கன்னியாஸ்திரிகள், கத்தோலிக்க பக்தர்கள் மற்றும் பௌத்த மதகுருமார்கள் பங்கேற்றுச் சிறப்பித்த னர். (ச-இ)

# சந்தைகளில் மரக்கறி வரத்துச் சரிவு; வறட்சியால் தீவிரமாகும் தட்டுப்பாடு

கொழும்பு, ஓக.1
நாட்டில் நிலவிவரும் கடுமையான வறட்சி யான காலநிலை மற்றும் உரங்கள் கிடைக் கப் பெறாமை காரணமாக இலங்கையில் காய்கறிகளுக்குப் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாக மொத்த வியா பாரிகள் தெரிவித்துள்ளனர்.
தம்புள்ள பொருளாதார மையம் மற்றும் கொழும்பு மெனிங் சந்தை ஆகியவற்றின் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் ஊடகங் களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,
தம்புள்ள பொருளாதார மையத்துக்கு நாளொன்றுக்கு வரும் 600,000 கிலோ காய்கறிகளின் வரத்து, கடந்த சில நாள் களாக 400,000 கிலோவாகக் குறைந்துள் ளது. கடுமையான வறட்சி மற்றும் போதிய உரங்கள் கிடைக்காததே இந்த உற்பத்திச் சரிவுக்கு முக்கியமான காரணங்களாகும். குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வேகமாக சரிந்து வருவதால் விவ



சாயிகள் புதிய காய்கறிச் செய்கையில் ஈடு படத் தயக்கம் காட்டி வருகின்றனர்.
காய்கறிகளை நீண்ட நாள்களுக்குக் கை யிருப்பில் சேமித்து வைக்க முடியாது என்ப தால், வரும் நாள்களில் இந்தத் தட்டுப்பாடு மேலும் தீவிரமடையக்கூடும். வறட்சி தொடரு மானால், வரும் கிழமைகளில் சந்தைக்கு வரும் காய்கறிகளின் அளவு மேலும் குறைந்து, அத்தியாவசிய உணவுகளின் விநியோகச் சங்கிலியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# அரையாண்டில் அரச வருமானம் ரூ. 2.956 டிரில்லியனாக உயர்வு!

**கொழும்பு, ஓக.1**
**2026ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் அரசாங்கத்தின் மொத்த வருமானம் மற்றும் மானியங்கள் 27 சதவீதத்தால் அதிகரித்து 2.956 டிரில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளதாக நிதி அமைச்சின் அரச நிதிக் கொள்கை திணைக்களம் வெளியிட்டுள்ள அரையாண்டு ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதன்மூலம் கடந்த 2025 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் பதிவாகியிருந்த 405.6 பில்லியன் ரூபா வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு மாறாக, இம்முறை 9.5 பில்லியன் ரூபா வரவு-செலவுத் திட்ட உபரி பதிவாகியுள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரி வருமான இலக்கு 4.91 டிரில்லியன் ரூபாஎன்பதுடன், முதல்ஆறு மாதங்களிலேயே அதில் 55.2 சதவீதத்தை அரசாங்கம் எட்டியுள்ளது. வரி அல்லாத வருமானமும் 43.6 சதவீதத்தால் அதிகரித்து 243.6 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது.

அதிகபட்ச பங்களிப்பாக இலங்கை சுங்கம் 1,290 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது. இதில் இறக்குமதி மீதான பெறமதி சேர்க்கப்பட்ட வரி மூலம் 443.7 பில்லியன் ரூபாவும், மோட்டார் வாகன இறக்குமதி வரி மூலம் 266.4 பில்லியன் ரூபாவும் கிடைக்கப் பெற்றுள்ளன. இரண்டாவது அதிகபட்ச பங்களிப்பாக 1,248 பில்லியன் ரூபா உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் ஈட்டப்பட்டுள்ளது. இதில் வருமான வரி மூலம் 568.4 பில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளதுடன், நிறுவன வருமான வரி 26% ஆலும் தனிநபர் வருமான வரி 15% ஆலும் வளர்ச்சியடைந்துள்ளன. (ச-இ)

## சிறைச்சாலை பஸ்ஸை வீடியோ எடுத்தவர் கைது

கொழும்பு, ஓக.1
உடுகம நீதவான் நீதிமன்றத்திற்குச் சந்தேக நபர்களை அழைத்துச் சென்ற சிறைச்சாலை பேருந்தை தனது கைத்தொலைபேசி மூலம் இரகசியமாக காணொலி பதிவு செய்த பெண் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தப் பெண் உடுகம நீதவான் நீதிமன்றத்துக்கு முன்பாக, தனது கைத்தொலைபேசியை மறைத்து வைத்து சிறைச்சாலை பேருந்தைக் காணொலியாகப் பதிவு செய்தார் என்று கூறப்படுகின்றது. கைதுசெய்யப்பட்ட பெண் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-இ)

## பாதாள குற்றவாளிகள் மலேசியாவில் கைது!

கொழும்பு, ஓக.1
சர்வதேச போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுத் தலைவரான கஞ்சிபானி இம்ரானின் நெருங்கிய உதவியாளர்கள் என சந்தேகிக்கப்படும் 'சைமா' என்பவர் உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்கள் மலேசியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச அளவில் இயங்கிவரும் இலங்கையின் பாதாள உலகக் குற்றப் பிணையங்களையும் போதைப்பொருள் வலையமைப்புகளையும் கட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் சர்வதேச கூட்டு நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. (ச-இ)



## வடக்கில் முதலீட்டாளர்களுக்கு சட்ட நடைமுறைகள் இறுக்கம்

யாழ்ப்பாணம், ஓக.1
வடக்கின் அபிவிருத்திக்கும், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் முதலீடுகள் மிகவும் அவசியமானவை. எனினும் இங்கு வரும் முதலீட்டாளர்களுக்கான சட்டநடைமுறைகள் இறுக்கமாகப் பின்பற்றப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் பல்வேறு காரணங்களால் தாமதமடைந்துள்ள முதலீட்டுத் திட்டங்கள் மற்றும் நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்கும் திட்டங்கள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடலில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

முதலீட்டாளர்கள் உரிய காலப்பகுதிக்குள் திணைக்களங்களின் அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். முதலீட்டாளர்களும் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே தங்களது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். முதலீடுகளை நாம் வரவேற்கும் அதேவேளை, சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தனர். (சு-03)

## அரசாங்கத்தை விமர்சித்த பொலிஸ் கைது

கொழும்பு, ஓக.1
ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் பல்வேறு கருத்துகளைப் பரப்பினார் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸ் அதிகாரி ஒருவர் மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த அதிகாரி மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஏ-இ)




## துண்டைக் காணம், துணியைக் காணோம்!

**ஆ**றின கஞ்சி பழங்கஞ்சிதான் எண்டாலும், சிலவேளையளில அதைச் சூடாக்கிப் போட்டுக் குடிச்சால் இன்னும் ரேஸ்ரா இருக்கும். அப்பிடித்தான் முந்தி இயக்கத்தின்ர ஆயுத ஒப்படைப்பில நடந்த விசயங்கள் சிலதைச் சொன்னால் அது இப்பத்தை மில்லேனியம் குஞ்சுகளும், ஜென்ஸீ பிஞ்சுகளும் அறிஞ்சுகொள்ளுவினம் எல்லோ.

சுதுமலை அம்மன் கோயிலில தலைவர் ஆயுதங்களை ஒப்படைக்கிறதா அறிவிச்ச பிறகு தெட்டம் தெட்டமா பலாலி, மட்டக்களப்பு எண்டு ஒவ்வொரு இடங்களிலயும் ஆயுதங்களை இயக்கம் ஒப்படைச்சது. ஏற்கனவே பட்சி சொன்ன மாதிரி நல்ல ஆயுதங்களை எல்லாம் 'டம்' பண்ணிப் போட்டு, சக்கட்டை ஆயுதங்களைத்தான் இயக்கம் இந்தியன் ஆமியிட்டக் குடுத்தது. இப்பிடி ஒரு ஆயுத ஒப்படைப்பு பலாலியில நடந்தது. மற்ற இடங்களில சிறிலங்கா ஆமி இல்லாட்டியும், பலாலி அப்ப அவையின்ர கொண்ட்ரோலில தான் இருந்தது. அதால இயக்கம் ஆயுதங்களை ஒப்படைக்கிறதைப் பாக்க சிலோன் ஆமிக்காரரும் வந்திருக்கினம். துவக்கில்லாமல் நோர்மலாத்தான் வந்தவையாம். எண்டாலும் அவையளை உள்ளுக்க விடக்கூடாது எண்டு இயக்கம் உறுதியாச் சொல்லிப்போட்டுது.

இந்தியன் ஆமிக்கு ரண்டுங்கெட்டான் நிலை. சிலோன் ஆமியை உள்ளுக்க விட்டால் இயக்கம் கோபிச்சுக்கொண்டு ஆயுதங்களை ஒப்படைக்காமல் திரும்பிப் போடும். இயக்கம் சொன்னதைக் கேட்டு சிலோன் ஆமியை வெளியேத்தினால் ரண்டு நாட்டுக்கும் இடையில முட்டுப்பாடு வரும். இப்பிடியொரு நிலையில ஆமியா, இயக்கமா எண்டு பார்த்து அப்பத்தச் சூழலில இயக்கத்தின்ர சொல்லைக் கேக்கிறது எண்டு இந்தியன் ஆமி முடிவெடுத்தது. அங்க நிண்ட சிலோன் ஆமிக்காரரையெல்லாம் வெளியில போகச் சொல்லி இந்தியன் ஆமிக்காரர் கத்திச்சினம். இயக்கத்துக்கு முன்னுக்கு இப்பிடி இந்தியன் ஆமி அவமானப்படுத்திப் போட்டுதே எண்டு சிலோன் ஆமிக்காரர் தலையைக் குனிஞ்சுகொண்டு போக, ஒருத்தர் மட்டும் திமிரோட 'இது எங்கட காம்ப். நாங்கள் ஏன் போகோனும்' எண்ட தோரணையில அசையாமல் நிண்டிருக்கிறார். இந்தியன் ஆமிக்கொமாண்டர் அவரைப் போகச் சொல்லியும் ஆள் போகேலை. அந்தக் கொமாண்டருக்கு வந்திதே கோபம். அப்பிடியே அந்தச் சிலோன் ஆமியின்ர கழுத்தைப் பிடிச்சு ஒரே தள்ளில வெளியில தள்ளிப்போட்டார். இப்பிடித் தங்கட காம்பிலையே தலையைப் பிடிச்சு தள்ளின கொடுமை வேற எந்த ஆமிக்கும் கிடைச்சிருக்காது. அதுக்குப் பிறகுதான் இயக்கம் அங்க ஆயுதங்களை ஒப்படைச்சதாம்.

இப்பிடி பல இடங்களிலயும் இயக்கம் முழு ஆயுதங்களையும் ஒப்படைச்சிட்டு எண்டு நினைச்சுத்தான் இந்தியன் ஆமிக்காரர் சண்டையைத் தொடங்கினவை. அவை ஏன் அப்பிடி நம்பினவை எண்டால், எல்லா இயக்கத்துக்கும் முதலில ஆயுதங்கள் குடுத்தது இந்தியா தானே. எந்தெந்த இயக்கத்துக்கு எவ்வளவு ஆயுதம் குடுத்தம் எண்ட லிஸ்டை இந்தியா வைச்சிருந்தது. அந்த லிஸ்ட்டில இருந்ததை விடவும் இயக்கம் கூடவாத்தான் ஆயுதங்களை ஒப்படைச்சது. அதால அவைக்கு இயக்கத்தில டவுட் வரேலை. ஆனால் இயக்கத்துக்கு இந்தியா குடுத்த ஆயுதங்களை விட, சண்டையளில அள்ளியெடுத்த ஆயுதங்கள் பலமடங்கு எண்டு இந்தியன் ஆமி யோசிக்கவேயில்லை. அப்பிடி யோசிக்காமல் சண்டையைத் துவக்கினபடியாலதான் கடைசியில துண்டைக் காணம், துணியைக் காணோம் எண்டு ஓடித்தப்பினவை கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஊடகத்துறையில் நேர்மையாக பணியாற்றியவர் சபேஸ்வரன்

*தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் இரங்கல்*

யாழ்ப்பாணம், ஓக.1
ஊடகத்துறையில் தன்னை இணைத்துக் கொண்ட நாள் முதல் இறுதி மூச்சு வரை ஊடகப்பணியை அர்ப்பணிப்புடனும், நேர்மையுடனும் எந்தவித சமரசமுமின்றி முன்னெடுத்த சிறந்ததொரு ஊடகவியலாளர் சபேஸ்வரன் என்று தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் இரங்கல் வெளியிட்டுள்ளது.

யாழ்.தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் இணை ஆசிரியரும், யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் விரிவுரையாளரும், யாழ். ஊடக அமையத்தின் முன்னாள் தலைவருமான சிரேஷ்ட ஊடகவியலாளர் ஆறுமுகம் சபேஸ்வரன் கனடாவில் காலமானார்.

இதுதொடர்பில் ஒன்றியம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட சபேஸ்வரன் தமிழ் ஊடகத்துறையில் ஊடகவியலாளர்களின் குரலாகவும், அவர்களின் உரிமைப் போராட்டங்களில் முன்னின்று உழைத்தவர். தமிழ் மக்களது உரிமைசார் போராட்டங்கள் தொடர்பான செய்திகளை நடுநிலையாகவும் பிரசுரித்து, தமிழ் மக்களின் போராட்டங்களுக்கு வலுச்சேர்த்தவர். யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி பல திறமையான ஊடகவியலாளர்களை உருவாக்கியவர். அவர் ஆற்றிய ஊடகப்பணி அளவிடமுடியாதது. தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் நீண்ட கால உறுப்பினர்களில் ஒருவராக இருந்த சபேஸ்வரனின் மறைவு தமிழ் ஊடகத்துறைக்கும், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்துக்கும் பேரிழப்பாகவேயுள்ளது. அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்-என்றுள்ளது. (க)



சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் கோவிலின் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ச-9)

# விசேட பூசை

பளை, ஓக.1
பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயத்தில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான ஆசீர்வாதம் வழங்கும் விசேட பூசை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும். பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள மாணவர்களை இந்த விசேட பூசையில் பங்குபற்றி ஆசீர்வாதம் பெறுமாறு ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (க-9)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.1
பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக பிரிவில் செயலாற்றும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கூட்டத்தில் இந்த வருடம் நடமுறைப்படுத்திய திட்டங்களின் முன்னேற்றங்கள், நடைமுறைப்படுத்தவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. அத்துடன் தற்போது தீவிரமடையும் எல்-நினோ காலநிலை மாற்றம், அதனை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. கூட்டத்தில் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், பச்சிலைப்பள்ளி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அலுவலர், விவசாயப்போதனாசிரியர், மாவட்டச் செயலக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (க)

# புகையிலைக்குப் பதில் மாற்றுப் பயிர்த் திட்டம்

## விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.1
புகையிலைச் செய்கைத் தடையிலிருந்து முழுமையாக மீள 3-4 வருடங்கள் கால அவகாசம் வழங்குவதுடன், சிறந்த மாற்றுப் பயிர்த்திட்டத்தையும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று வல்வெட்டித்துறை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வல்வெட்டித்துறை, கொம்மந்தறை சனசமூக நிலையத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், விவசாய அமைப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர். மாற்றுப் பயிராக சின்ன வெங்காயத்தைப் பயிரிட்டு சந்தைக்குக் கொண்டுவரும் வேளை, அரசாங்கம் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வதால் எமக்கு நஷ்டம் ஏற்படுகின்றது என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டினர். இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர், விவசாயிகளின் பிரச்சினையை எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில், விசேட பிரேரணையாக முன்வைப்பேன் -என்றார். (க-80)

# கசிப்புடன் ஒருவர் கைது



யாழ்ப்பாணம்,ஓகஸ்ட் 1
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலங்காடுப் பகுதியில், கசிப்பை வைத்திருந்த குற்றச்சாட்டில், 35 வயதுடைய நபர் ஒருவர் கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்டார்.

அச்சுவேலிப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து, கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் ஒரு போத்தல் கசிப்பு மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-23)

# கிரிக்கெட் தொடர் தொடக்க விழா

யாழ்ப்பாணம், ஓக.1
N.V.T. suppliers Traders Transport நிறுவனத்தின் ஏற்பாட்டில் முதன்முறையாக நடத்தப்படும் பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரின் தொடக்க விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாதகல் சென்ஜோசப் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி உப அதிபர் சுமன் கலந்துகொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக.1
நாயன்மார்க்கட்டு ஸ்ரீராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து இடம்பெறும் திருவிழாக் காலத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (க)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** இன்று எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். முக்கியமான பிரமுகர் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**கன்னி:** உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். கணவன்– மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனக்கசப்புகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்குத் திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்கவும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# அந்தரத்தில் தொங்கும் தேசியப் பாதுகாப்பு..!

அண்மைய நாள்களாக நாட்டின் தென்பகுதியில் மிகப்பெரும் வன்முறைகள் மற்றும் தொடர் துப்பாக்கிச்சூடுகள் என்பன கணிசமாகப் பதிவாகி வருகின்றன என்பது அவதானிப்பு. குறிப்பாக, கடந்த 11ஆம் திகதியில் இருந்து 25ஆம் திகதி வரையான 14 நாள்களில் நாட்டில் 10 துப்பாக்கிச்சூடுகள் இடம்பெற்றிருக்கின்றன. கடந்த சில நாள்களாக துப்பாக்கிச்சூடுகள் எனப்படுபவை இந்தத் தீவில் பொதுவாய்ப் போய்விட்ட நிலையில், அண்மைக் காலமாக இடம்பெறும் வன்முறைகள் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளன. ஆதலால் நாட்டின் தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் அச்சப்பட வேண்டிய நிலையிலேயே ஒவ்வொரு இலங்கையர்களும் உள்ளனர்.

இலங்கை ஒன்றும் இராணுவப்பலம் குறைந்த நாடல்ல. இன்னும் சொல்லப்போனால், சிவில் சமூகத்தின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் மிக அதிகமான விகிதாசாரத்தில் இராணுவத்தைக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்றாகவே இலங்கை இன்றளவும் உள்ளது. அவ்வாறிருந்தும் பாதாள உலகக்குழுக்களின் 'சுதந்திரமான செயற்பாடுகள்', வன்முறைகள் என்பன தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன என்றால், இதன் பின்னாலுள்ள செய்தி மிகவும் ஆபத்தானது.

விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்படாத காலத்தில், வடக்கில் இராணுவக் குவிப்பு ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்குத் தேவையாக இருந்தது. ஆனால், புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னரும்கூட ஸ்ரீலங்கா இராணுவத்தின் வதிவிடமாகத்தான் வடக்கும் கிழக்கும் மாற்றப்பட்டிருக்கின்றன. குறிப்பாக முல்லைத்தீவில் இராணுவ ஆக்கிரமிப்பும், இராணுவ மயப்படுத்தலும் அதியுச்சமாகக் காணப்படுகின்றது. நாட்டின் பெருமளவு சிப்பாய்கள், வடக்கையும் கிழக்கையும் மையப்படுத்தி நிலைப்படுத்தப்பட்டிருப்பது எத்தனை பெரும் தோல்வியான சிந்தனை என்பதையே தென்னிலங்கையில் இடம்பெறும் இந்தத் துப்பாக்கிச்சூடுகளும், தாக்குதல்களும் எண்பிக்கின்றன.


வடக்கில் இடம்பெறும் பொதுமக்களின் போராட்டங்களிலும், பேரணிகளிலும் விடுதலைப்போராட்டம் தொடர்பான கருத்தூட்டல்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா? என மிக நுணுக்கமாக அவதானிக்கும் புலனாய்வுத் துறையினர், தெற்கில் மிகவும் சுதந்திரமாக இயங்கும் பாதாள உலகப் பெருச்சாளிகளை அடையாளப்படுத்துவதிலும், கைதுசெய்வதிலும் தோற்றுப்போயிருப்பது இயலாமையின் உச்சம். ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொறுப்பேற்ற காலங்களில் நாட்டில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடுகளுக்கு, முன்னைய அரசாங்கங்களின் ஆட்சிக்காலத் தாக்கம் ஒரு காரணமாக இருந்தது. அதை மக்கள் நன்றாகவே புரிந்துகொண்டனர். ஆனால், அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்று ஒன்றரை வருடங்களாகியும் ஓயாது தொடரும் ஆயுதக் கலாசாரத்துக்கு கடந்த அரசாங்கங்களை குறை சொல்ல முடியாது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதற்குப் பொறுப்பேற்றேயாக வேண்டும்.



## பொய்யாமொழி

**ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு**

**பொருள்:** அயலாருடைய குற்றத்தைக் காண்பதுபோல் தம் குற்றத்தையும் காணவல்லவரானால், நிலைபெற்ற உயிர் வாழ்க்கைக்குத் துன்பம் உண்டோ?



# பொருளாதார வளர்ச்சிக்காக ஆசிய வங்கி 200 மில். டொலர்



**கொழும்பு, ஓக.1**

**மத்திய கிழக்கு மோதல் காரணமாக உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு மத்தியில், இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.**

இலங்கையின் வர்த்தகம், முதலீடு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட கொள்கைக்கடன் திட்டத்தின் கீழ் இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

மொத்த 200 மில்லியன் டொலரில், 100 மில்லியன் அமெரிக்க டொலர் மத்திய கிழக்கு நெருக்கடியினால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள உடனடிப் பொருளாதார அழுத்தத்தைக் குறைப்பதற்கான விசேட மேலதிக நிதியுதவியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் புதிய வேலைவாய்ப்புகளை விரிவாக்குதல், புதிய முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் வர்த்தகத்தை ஊக்குவித்தல் என்பன இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். (ச-இ)

## டெங்கு மரணம் 62 ஆக உயர்வு

நாட்டில் டெங்கு நோயால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 62 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. அந்தப் பிரிவு வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, இந்த ஆண்டின் இதுவரை 84,724 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

அவற்றில், ஜூலை மாதத்தில் நேற்றுமுன்தினம் வரை 29,350 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாவட்ட வாரியாக, கம்பஹா மாவட்டத்தில் அதிகபட்சமாக 17,971 பேரும், கொழும்பு மாவட்டத்தில் 16,814 பேரும், கண்டி மாவட்டத்தில் 5,873 பேரும் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)



## திருமலை துறைமுக வருமானம் உயர்வு!

கொழும்பு, ஓக.1

இலங்கையின் இயற்கைத் துறைமுகமான திருகோணமலைத் துறைமுகம் ஊடாக அரையாண்டிலேயே 958 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது என திருகோணமலைத் துறைமுக இருப்பிட முகாமையாளர் சரத் குமார தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டுகளை விடத் திருகோணமலைத் துறைமுகத்தின் செயற்பாட்டு வருமானம் கணிசமாக அதிகரித்துள்ளது.

2026ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் 958 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஜப்பான் – இலங்கையிடையே தொழில்வாய்ப்பு ஒப்பந்தம்!

கொழும்பு, ஓக.1

ஜப்பான் மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கு இடையில் திறன் மேம்பாட்டு வேலைவாய்ப்புத் திட்டம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இலங்கையுடன் ஏற்கனவே நடைமுறையில் உள்ள தொழில்நுட்பப் பயிற்சி பயிலுநர் திட்டம் எதிர்வரும் 2027 ஏப்ரல் மாதம் முதல் நிறைவடைந்து, அதற்குப் பதிலாக திறன் மேம்பாட்டு வேலைவாய்ப்பு திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது. இதனை முன்னிட்டு இந்த புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)

## மதுவரித்திணைக்களத்துக்கு 141.5 பில். ரூபா வருமானம்

2026ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கை மதுவரித் திணைக்களம் 141.5 பில்லியன் ரூபா வரி வருவாயை ஈட்டியுள்ளது என்று மதுவரி ஆணையாளர் நாயகம் எம்.பி.என்.ஏ. ஹேமரத்ன தெரிவித்துள்ளார். 2026ஆம் ஆண்டுக்காக அரசாங்கம் நிர்ணயித்துள்ள மொத்த 245 பில்லியன் ரூபா வருவாய் இலக்கில், முதல் ஆறு மாதங்களுக்கான இலக்கு 119.3 பில்லியன் ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன்படி, நிர்ணயிக்கப்பட்ட இலக்குடன் ஒப்பிடுகையில் 118.6 சதவீத வருவாய் இலக்கை எட்டும் வகையில் திணைக்களம் வருவாய் ஈட்டியுள்ளது. மேலும், 2025ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பதிவான 117.03 பில்லியன் ரூபா வருவாயுடன் ஒப்பிடுகையில், 2026ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் வருவாய் அதிகரிப்பு பதிவாகியுள்ளது. (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை-ஆடி 17
02.08.2026
சுபநேரம் : 09.03 – 10.33
ராகுகாலம் : 04.33 – 06.03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாத ஒடுக்குமுறை இருக்கும்வரை தமிழருக்கு நீதி ஒருபோதும் கிடைக்காது!

அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவிப்பு



**கொழும்பு, ஓக.1**

**தமிழர்களின் அரசியல் விடயத்தில் சட்டமும் நீதியும் பௌத்த பேரினவாதத்தின் கரங்களில் தவழும் வரை தமிழ் மக்களுக்கு ஒருபோதும் நீதி கிட்டப் போவதில்லை என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியற்கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப் பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசியற்கைதிகள் என்று எவரும் இல்லை" என நீதி அமைச்சர் நாடாளு மன்றத்தில் கூறியிருப்பது, சிங்கள பௌத்த பேரினவாத அரசியலால் தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்ந்து தண்டிக்கப்படுவதையே காட்டுகிறது.

தமிழ்த்தேச அரசியலை அழிக்கவும், தமிழர்களைப் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கவும் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பாதுகாத்துக்கொண்டு,சிறைச்சாலைச் சட்டத்தைக் காரணம் காட்டுவது அரசியல் கேலிக்கூத்தாகும்.தற்போதைய ஜனாதிபதி பதவிக்கு வரும் முன்னர் தமிழர் தாயகத்தில் தேர்தல் பரப்புரைகளில் "அரசியற் கைதிகளை விடுதலை செய்வோம்" என வாக்குறுதியளித்து வாக்குகளைப் பெற்று, பதவியேற்ற பின்னர் நீதியமைச்சர் ஊடாகத் தனது உண்மையான நிலைப்பாட்டைச் சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முதற்கட்டமாக, சிறைகளில் வாடும் அரசியற்கைதிகளை விடுதலை செய்வதற்கான சட்ட திருத்தங்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்-என்றார். (ச-இ)

---

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
15 . 08 . 1956

மறைவு
29 . 07 . 2026

### அமரர் பரமலிங்கம் ஸ்ரீகாந்தகுமாரி

யாழ் சாரங்கா நகைமாடமாகிய எமது ஸ்தாபனத்தில் நீண்ட காலமாக பணியாற்றிய ப.நிதர்சனின் அன்புத் தாயாரும், P.நிலக்ஷனின் அன்புத் தாயாரும் இறந்த செய்திகேட்டு துயரில் இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.


**உரிமையாளரும், ஊழியர்களும்.**
**சாரங்கா நகை மாடம்,**
**157/1, கஸ்தூரியார் வீதி.**

(CS 31417)A

---

## மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 03 . 1968



மறைவு
30 . 07 . 2026

### நடராஜா இலங்கேஸ்வரன்

**(அலுவலர் - அரசாங்க விதை மற்றும் நடுகைபொருள் திணைக்களம் - கிளிநொச்சி)**

பேராலையை பிறப்பிடமாகவும் பெரியபளை, பளை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட நடராஜா இலங்கேஸ்வரன் அவர்கள் கடந்த 30.07.2026 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா மற்றும் பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சுபத்திராதேவியின் அன்புக் கணவரும், சாரங்கா (பிரயோக விஞ்ஞான பீடம், வவுனியா பல்கலைக்கழகம்), திவ்யா (மாணவி - பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், லோகநாதன் (இளைப்பாறிய அலுவலர்), காலஞ்சென்ற பிறேமவாசன் (அபிவிருத்தி அலுவலர், பளை பிரதேச செயலகம்), தர்சினி (பெரிய பளை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஏகாம்பரம், காலஞ்சென்ற மகாலிங்கம், கருணாவதி, பராசக்தி (சுவிஸ்), காலஞ்சென்ற ஞானசோதி, சுந்தரலிங்கம் சாந்தநாயகி (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மலயன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**


**பெரியபளை,**
**பளை.**

(CS 32213)A

---

## மரண அறிவித்தல்

பிறப்பு
24 . 09 . 1979



இறப்பு
30 . 07 . 2026

### சதானந்தன் மயூரன்

கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதானந்தன் மயூரன் அவர்கள் 30.07.2026 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சதானந்தன் யோகராணி தம்பதியினரின் மூத்த புதல்வரும், பிரதீபன் (நெதர்லாந்து), டயானா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், லினோஜா (நெதர்லாந்து) அமுதகுமார் (கொழும்பு) ஆகியோரின் ஆசை மைத்துனரும், அம்ஷிகா, அம்ஷிகன்,அம்ஷனா ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரித்திக், லிஷானா, லியானா ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ரஞ்சனாதேவி புவனேந்திரன், சாந்தனா தேவி ஸ்ரீஸ்கந்தராசா, சிலோசனாதேவி பாலச்சந்திரன், வசந்தராதேவி காலஞ்சென்ற ஜெகநாதன், ரெஜினாதேவி ஆனந்தன், சுபத்திராதேவி கமலநாதன் ஆகியோரின் அன்பு மருமகனும் சத்தியநாதன் கேதீஸ்வரி, ரவீந்திரநாதன் காலஞ்சென்ற சுதா, மற்றும் பார்த்தீபன் பவானியின் பாசமிகு பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (2026.08.02) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**சதானந்தன் பிரதீபன் - சகோதரன் - 0031657333888**
**அமிர்தலிங்கம் அமுதகுமார் -மைத்துனர்- 0094777760960**
**பார்த்தீபன் பவானி - சித்தி - 0769255096**

(CS 32253)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீதிபதிகள் வயது நீடிப்பில் அரசாங்கம் தன்னிச்சை!

## ஆளுங்கட்சி மூத்த உறுப்பினர் தெரிவிப்பு

மேல் நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிக்கும் அரசாங்கத்தின் தீர்மானம் குறித்துத் தம்மை மௌனமாக இருக்குமாறு விவசாய அமைச்சர் கே.டி. லால் காந்த கேட்டுக்கொண்டதாக ஆளும் தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ சபை மற்றும் தேசிய செயற்குழு உறுப்பினரும் மூத்த சட்டத்தரணியுமான லால் விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ சபை மற்றும் அரசியல் குழு உறுப்பினரான ஒருவர் தொலைபேசியில் அழைத்து 'இந்த விவகாரத்தில் நீங்கள் ஏன் அமைதியாக இருக்கக்கூடாது?' என்று கேட்டார். எனது கொள்கை ரீதியான நிலைப்பாட்டை விளக்கி அவருக்குக் கடிதம் எழுதியதுடன், அதன் பிரதிகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் அனுப்பியுள்ளேன். இந்த எதிர்ப்பு தனிப்பட்ட மோதலால் எழுந்ததல்ல, கொள்கை ரீதியானது. நாகரிகமடைந்த ஒரு சமூகத்தில் வாழ சட்டத்தின் ஆட்சி மிக அவசியம். நீதித்துறை சுயாதீனமாக இயங்கினால் மட்டுமே சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்படும். நீதிபதிகளின் சேவை நிபந்தனைகளைப் பாதிக்கும் இத்தகைய முடிவுகள், எதிர்கால அரசாங்கங்கள் நீதித்துறையைத் தங்கள் விருப்பத்துக்கு ஏற்ப கையாள்வதற்குக் வழிவகுத்துவிடும்.

நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதிக்கும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் எதிராகக் குரல் கொடுப்பது கொள்கை ரீதியானது. இதில் நான் மௌனமாக இருக்கமுடியாது - என்றேன். (ச-இ)


## தவறவிடப்பட்டுள்ளது

சுண்டிக்குளி பகுதியில் கடந்த ஒரு வாரமாக **இந்திராணி ஆறுமுகம்** என்பவரது **தேசிய அடையாள அட்டை (இல.194063105169)** தவறவிடப்பட்டுள்ளது

கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

**இல.4, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.**

**(பாடசாலைக்கு அருகாமையில்)** (cs 61989) (N.1)

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 15 . 04 . 1942



விண்ணில் 28 . 07 . 2026

எமது ஆலய பரிபாலனசபையின் முன்னாள் தலைவர்

**அமரர் நாகமுத்து சுந்தரம்**

அவர்களின் மறைவையொட்டி துயருற்று இருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா கற்பக விநாயகரின் பாதார விந்தங்களை அடைய பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலன சபை,**

**ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம், உரும்பிராய்.**

(CS/61991) J-1

## பொது அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

கீரிமலையில் ஆடி அமாவாசை தினத்தன்று (12.08.2026) தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல் மற்றும் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்களை பதிவு செய்தல்

**1. தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல்**

கீரிமலையில் ஆடி அமாவாசை தினத்தன்று உற்சவகால தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 06.08.2025 வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் தெல்லிப்பளை உப அலுவலகத்தில் ரூபா 200.00 கட்டணம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். பகிரங்க ஏலம் 07.08.2026ம் திகதியன்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் 9.30 மணிக்கு கீரிமலை பேரூந்து நிலைய முன்றலில் நடைபெறும்.

**குறிப்பு:**

- ➢ சித்திபெற்ற கேள்விதாரர்கள் உடனடியாகவே அதற்கான குத்தகைப்பணம் முழுவதையும் செலுத்துவதுடன் வியாபார உரிமத்தினையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.
- ➢ ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும், உற்சவ காலத்திற்கு பிரதேச சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி வியாபாரம் மேற்கொள்ள முடியாது.
- ➢ உணவு கையாளும் நிலையங்கள் சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் அனுமதியினைப் பெற்றுக்கொண்ட பின்னரே வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

**2. பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்கள் பதிவு செய்தல்**

பிதிர்க்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்கள் 10.08.2026ம் திகதி மு.ப 9.00மணி தொடக்கம் பி.ப 3.00மணி வரையும் 11.08.2026 திகதி மு.ப 9.00மணி தொடக்கம் பி.ப 3.00மணி வரையான காலப்பகுதியில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கீரிமலை புனித தீர்த்தக்கரை அலுவலகத்தில் படிவ கட்டணமாக ரூபா200.00உம் இடவரி கட்டணமாக ரூபா3000.00உம் செலுத்தி தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


- ➢ பதிவுகள் மேற்கொள்ள வரும் சிவாச்சாரியார்கள் தங்களுக்குரிய பதிவு செய்யப்பட்ட சிவாச்சாரிய அடையாள அட்டை சமர்ப்பிப்பது கட்டாயமானது.
- ➢ மேலும் எம்மிடம் பதிவுகள் மேற்கொள்ளாத சிவாச்சாரியார்கள் ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலை புனித பிரதேசத்தில் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**சோ.சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**021 224 4180**

01.08.2026

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 04 . 1982



மறைவு 12 . 08 . 2025

**அமரர் சிவகுமாரன் ஓம்பிரகாஷ்**

உதிரத்தால் இணைந்த உன்னத உறவு இது
உயிர் கொடுத்து காக்கும் அன்பு பந்தம் இது
தோள் கொடுக்க ஒரு தோழனாய்
வழி காட்ட ஒரு தந்தையாய்
துன்பத்திலும் இன்பத்திலும் துணையாய் நின்றாய்
ஆனால் இன்று நீ எம்மோடு இல்லை
ஒரே மண்ணில் முளைத்த செடிகள் நாம்
ஒரே கிளையில் பூத்த மலர்கள் நாம்
காலம் நம்மை எங்கு கொண்டு சென்றாலும்
நமது பாசம் என்றும் எப்போதும் மாறாது
பேசாமல் இருந்தாலும் எம் மௌனம் அறிவாய்
நிழலாய் எம்மைத் தொடர்ந்து வந்தாய்
நீ இருக்கும் தைரியத்தில் நாம் வாழ்ந்தோம்
உயிருக்கு உயிராய் அன்பு செலுத்தும் உறவே
ஏன் எம்மை விட்டுச் சென்றாய்
நீ எம்முடன் இல்லை என்பதை இன்றுவரை
எம்மால் நம்ப முடியவில்லை
நீ என்றும் எம் இதயத்தில் தெய்வமாக வாழ்வாய்
என்றும் உன் நினைவுகளுடன்........

**30, கலட்டி அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(cs 32243) (N)

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மேர்வினிடம் 2 ஆண்டுகளில் 600 மில்லியன் ரூபா சொத்து!

## வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தாக்கல் செய்துள்ள 600 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான முறையற்ற சொத்துக்குவிப்பு தொடர்பான வழக்கு, எதிர்வரும் 20ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.2010ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரையிலான 2 வருட குறுகிய காலப்பகுதியில், தனது சட்டபூர்வமான வருமானத்துக்கு அப்பாற்பட்டுப் பெருமளவிலான அசையும் மற்றும் அசையா சொத்துகளைச் சேர்த்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. அமைச்சராக இருந்த 24 மாதங்களில் மேர்வின் சில்வா மற்றும் அவரது குடும்பத்தினர் பெயரில் பெருமளவிலான நிலையான வைப்புகள் மற்றும் வங்கிக் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன. இரண்டு வருடங்களுக்குள் 7 சொகுசு வாகனங்களை இவர் கொள்வனவு செய்துள்ளார். 2 ஆண்டுகளில் 2 கிரெடிட் கார்டுகளைப் பயன்படுத்தி 4.2 மில்லியன் ரூபாவைப் பொருள்களுக்காகச் செலவிட்டுள்ளார். மேலும், வருமானம் மூலம் வெளிப்படுத்தப்படாத 34.7 மில்லியன் ரூபா கடனை ஒரே தடவையில் செலுத்தி முடித்துள்ளார். குடும்பத்தினருக்கு வருடாந்தம் 1.3 மில்லியன் ரூபா தவணைக் கட்டணத்தில் 6 ஆயுள் காப்பீடுகளைப் பராமரித்து வந்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.(ச–இ)


# மரண அறிவித்தல்



மண்ணில் 12 . 12 . 1951

விண்ணில் 30 . 07 . 2026

## சிறீதரன் சாரதாதேவி

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிறீதரன் சாரதாதேவி அவர்கள் கடந்த (30.07.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - பரிமளம் தம்பதியரின் மூத்த மகளும், பருத்தித்துறை புலோலியைச் சேர்ந்த காலஞ்சென்ற வெற்றிவேலு - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், வெற்றிவேலு சிறீதரன் அவர்களின் அன்பு மனைவியும், சோமிதரன் (திரைப்பட இயக்குநர்), சிறீஜா (ஜேர்மனி), சிந்துஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், செரின், சுரேஸ்குமார், கௌரிதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆதிரை, றெனி, மருதன், திவ்யன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும், ஞானச்சந்திரன் (இந்தியா), காலஞ்சென்றவர்களான பிரேமச்சந்திரன், தயாளச்சந்திரன், ஜெயச்சந்திரன், ஜெகச்சந்திரன் மற்றும் விமலச்சந்திரன் (கனடா), மங்களாதேவி, சுந்தரகுமாரன், ஞானரோகினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுபத்திராதேவி (இந்தியா), சறோஜினிதேவி (கனடா), விநாயகமூர்த்தி, கமலாதேவி, ஜெகநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெணியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
வேரற்கேணி, கந்தசாமி கோயிலடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
074 142 6723

(CR/47865) J-1



# மரண அறிவித்தல்

அமரர்

## இராமகிருஷ்ணன் உமாதேவி



தோற்றம் 25.02.1958 மறைவு 31.07.2026

சுழிபுரம் கிழக்கை பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கு 'கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமகிருஷ்ணன் உமாதேவி அவர்கள் நேற்று (31.07.2026) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான பெரியதம்பி - திலகவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராமகிருஷ்ணனின் அன்பு மனைவியும், கீர்த்திகாவின் அன்புத் தாயாரும், பற்குணதேவியின் அன்புச் சகோதரியும், சிவசுப்பிரமணியத்தின் மைத்துனியும், நிரோஜனன், இலாவண்யா, தரங்கிணி, ஆதிரஜனன், அரங்கஜனன் ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
கேணியடி வைரவர் கோயிலடி,
(CS/32250) J-1 திருநெல்வேலி கிழக்கு.



ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்



## திரு. மயில்வாகனம் தில்லைநாராயணன்

தம்பாலை அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தில்லைநாராயணன் அவர்கள் 30.07.2026 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்லப்பாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான முருகையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தேவேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற விமலாதேவி மற்றும் சத்தியதேவி, பாஸ்கர நாராயணன் ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரி, தனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், முகுந்தன் (லண்டன்), நவநீதன் (ஜேர்மனி), மகிந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வமலர் (லண்டன்), பாமினி (ஜேர்மனி), சிவசலோனி (ஆசிரியர் - யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனும், சுலக்ஷ்மன், அபிசனன், சானுஜன், சிபியா, சேயோன், சுஜன், ஆரபி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2026) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சன்னதி வீதி,
தம்பாலை அச்சுவேலி. (CS 61996 N-1

தகவல்: குடும்பத்தினர்.
077 123 4632



# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை : பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : கதிர்காமநாதன் கதிர்ரஞ்சன் பெண் வித்தியா
சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர் : சதாசிவம் தெய்வானை
முகவரி: ஆதன இல:69/30A, வீதி: அம்மன் வீதி, பண்டத்தரிப்பு, வட்டாரம் - 03

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 03 அம்மன் வீதியில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. இவ் ஆதனம் தம்பையா மகள் பாக்கியத்துக்கு பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 6675/02.11.2008ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 6677/05.11.2008 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கதிர்காமநாதன் கதிர்காமறஞ்சனுக்கும் பெண் வித்தியா என்பவர்களுக்கு சொந்தமாகியது. பின்னர் பிரசித்த நொத்தாரிசு சி.சிவபாலசுப்பிரமணியம் முகதாவில் 1463/21.03.2020 ஆம் இலக்க நிபந்தனை அறுதி மூலம் ஜோசப் இராசநாயகம் செல்வகயன் என்பவருக்கு வந்தடைந்தது. பின்னர் பிரசித்த நொத்தாரிசு சி.சிவபாலசுப்பிரமணியம் முகதாவில் 1811/23.12.2021 ஆம் இலக்க அறுதி மூலம் கதிர்காமநாதன் கதிர்ரஞ்சன் பெண் வித்தியா ஆகியோருக்கு வந்தடைந்தது.

மேலும் குறித்த ஆதனத்தை உத்தரவு பெற்ற நில அளவையாளர் அ.சந்தியாப்பிள்ளை அவர்களால் அளந்து வரையப்பட்ட 2047ம் இலக்க 09.02.2011 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு மூன்று(3) குளி பூச்சியம் நான்கு(04)ஆக காணப்படுகின்றது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்கு பகுதி சங்கானை கோவிற்பற்று சங்கானைமேற்கு இறை "மன்னன் கந்தன் புலோ" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 03 குளி 04 ஆகும்.

இதன் எல்லைகள்

| | | |
|---|---|---|
| வடக்கு | - | குணராசா பெண் இராசகுமாரிக்குரிய காணியும் குறித்த காணிக்கு போக்குவரத்து செய்யும் எட்டு முழ அகலம் கொண்ட பாதை முகப்பும் |
| கிழக்கு | - | இளையதம்பி பெண் பரமேஸ்வரியின் உரிமைக்காரரின் ஆதனம் |
| மேற்கு | - | மன்னவன் பத்மராசின் ஆதனம் |
| தெற்கு | - | நடராசா நிலாவர்ணகுமாருக்குரிய ஆதனம் |

இவ்வாதனத்தை கதிர்காமநாதன் கதிர்ரஞ்சன் பெண் வித்தியா என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன ஆட்சேபனையை உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். (Cr 61998) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பெருந்திருவிழா


கொழும்பு, ஓக.1

சாவகச்சேரி கச்சாய் வீதி கோயிற்குடியிருப்பு சந்தன முதலிச்சிபுலம் நடராஜ முருகமூர்த்தி கோவில் பெருந்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 11ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் ஆடி அமாவாசையன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(ச-9)

## 5ம் ஆண்டு நினைவு தினம்

மலர்வு 05.05.1937



மறைவு 26.07.2021

### அமரர் இலட்சுமிப்பிள்ளை நடராசா (தவமணி)

திதி: கிருத்திகை 01.08.2026

ஆண்டு ஐந்து ஆனதம்மா. ஒரு நிமிடம் அம்மா.... கொஞ்ச நேரம் என் கூட இப்ப அருகில் இருக்கமாட்டீங்களா என்று தவிக்கின்றேன் அம்மா....உங்கள் குரல் அப்பப்ப ராகினி ராகினி என்று என்காதில் ஒலிக்க அம்மா....என்று எனக்கு நானே திரும்பிப் பார்க்கின்றேன் காணவில்லை ஆனால் உங்க குரல் மட்டும் எங்கிருந்து வருகின்றது அம்மா என்னைவிட்டு எங்கே மறைந்தீர்கள் அம்மா இந்தப் பிறவியில் மட்டுமல்ல அடுத்தபிறவியிலும் நீங்கள்தான் என் தாயாகப்பிறந்து என் பிள்ளைகளுக்கும் வழிகாட்ட வேணும் உங்கள் ஆத்மா சாந்தியடைந்து மோட்சமடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!!!

(cs.61976)

விராங்கொடை
தெல்லிப்பழை

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மகள் ராகினி

## ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 14.06.1963



மறைவு 12.08.2025

### அமரர் அம்பிகாவதி மனோகரன்

ஓராண்டு ஓடிவிட்டது - ஆனால்
எங்கள் மனதில் உங்கள் நினைவுகளை
கடந்து செல்ல முடியாமல்
தினம் தினம் தவித்து நிற்கின்றோம்.
அம்மாவாக நீங்கள் தந்த அன்பை,
மனைவியாக நீங்கள் காட்டிய பாசத்தை,
சகோதரியாய் நீங்கள் பகிர்ந்த அக்கறையை,
அத்தையாக நீங்கள் பொழிந்த நேசத்தை,
பாட்டியாக நீங்கள் அளித்த அரவணைப்பை,
என்றும் எவராலும் மறக்கவும் முடியாது மறுக்கவும் முடியாது.
இன்று, எங்கள் கண்ணீர் துடைக்க
உங்கள் கைகள் இல்லை,
எங்களை வழிநடத்த
உங்கள் வார்த்தைகள் இல்லை,
எமக்காய் சிந்திக்க நிஜத்தில் நீங்கள் இல்லை,
ஆனால் உங்கள் நினைவுகள் மட்டும் எங்களோடு
உயிருள்ளவரை நிலைத்து நிற்கும்.
நீங்கள் விட்டுச்சென்ற அன்பின் தடங்கள்
என்றும் உங்களிற்காக ஏங்கிக்கொண்டேயிருக்கும் !!!

என்றும் அன்புடன்
குடும்பத்தினர்

(CS/32251) J-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 21.12.1957

இறப்பு 30.07.2026

### சரவணமுத்து பரமேஸ்வரன் (வரன்)

**(காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, முன்னாள் Belt Technical Supervisor)**

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து பரமேஸ்வரன் (வரன்) அவர்கள் கடந்த (30.07.2026)வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - நாகம்மா தம்பதியரின் அருமை மருமகனும், சீதாலட்சுமி அவர்களின் ஆருயிர்க் கணவரும், மைத்திரேயி, ஆரூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், துதிலனின் அன்புக்குரிய மாமனாரும், சைந்தவியின் பாசமுள்ள பேரனும், விக்கினேஸ்வரன் (வழக்கறிஞர் - USA), கெங்கேஸ்வரன், விக்கினேஸ்வரி, கெங்கேஸ்வரி ஆகியோரின் அன்பு மிக்க சகோதரனும், ஸ்ரீபதி, ஸ்ரீஸ்கந்தா, தவமதி (சகானா), அமுதவல்லி, உதயசங்கர், ஸ்ரீபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அனுஷன், தேனுஷியா, பிரியங்கா ஆகியோரின் சிறிய தந்தையும், யாமினி, குருப்பிரசாத் ஆகியோரின் பெரியதந்தையும், மிருணன், மிதிலன், மிதுலா, திருவாரூரன், வாகீசன், ஜெனனி, நிலஷ்ஷனா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 181 4741, 021 205 9551**

(CS/62001) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் சங்கங்களை நவீனமயப்படுத்துவோம்

## வர்த்தக அமைச்சர் வசந்த தெரிவிப்பு



கொழும்பு, ஓக.1

இலங்கையில் கடந்த காலங்களில் வீழ்ச்சியடைந்து வந்த கூட்டுறவுச் சங்கங்களை மறுசீரமைத்து, நவீன தனியார் சந்தைக்கு ஈடுகொடுக்கும் வகையில் அதனை வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் விரிவான பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது என்று வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயிகள் மற்றும் நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்கில், அரச நெல் கொள்வனவுச் செயற்றிட்டத்தை வலுப்படுத்த 500 மில்லியன் ரூபா செலவில் 40 நவீன நெல் உலர்த்தும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. களஞ்சியசாலை மற்றும் அரிசி ஆலை வசதிகளைக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரும் நவம்பர் 15ஆம் திகதிக்குள் இந்த இயந்திரங்கள் வழங்கி முடிக்கப்படும். நாட்டில் இயங்கிவரும் 302 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் உள்ள சுமார் 2,000 'கோப் சிற்றி' விற்பனை நிலையங்கள் தரம் உயர்த்தப்படுகின்றன. இதற்காகக் கூட்டுறவு அபிவிருத்தி நிதியிலி ருந்து 100 மில்லியன் ரூபா வரை குறைந்த வட்டிக் கடனுதவி வழங்கப்படுவதுடன், 10 மில்லியன் ரூபா நிதியுதவியில் 300 சிறிய கூட்டுறவு நகர விற்பனை நிலையங்கள் புதுப்பிக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்களை வெறும் பாரம்பரிய விற்பனை நிலையங்களாகப் பார்க்காமல், நவீன தொழில்நுட்பம் மற்றும் வசதிகளுடன் கூடிய போட்டிமிக்க சூப்பர் மார்க்கெட்டுகளாக மாற்றுவதே எமது முதன்மை நோக்கமாகும் - என்றார். (ச-இ)

**உணவகத்தில் பணம் கொள்ளை;**

# பொலிஸார் இருவர் உட்பட மூவருக்கு கடூழியச் சிறை

கொழும்பு, ஓக.1

தெஹிவளையில் உணவகம் ஒன்றில் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து பணத்தைக் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டிருந்த முன்னாள் பொலிஸ் அதிகாரிகள் இருவர் உட்பட மூவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

2008ஆம் ஆண்டு தெஹிவளைப் பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. வழக்கு விசாரணைகள் நிறைவடைந்த நிலையில், குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொள்ளைச் சம்பவத்தில் முதன்மை குற்றவாளி யாகக் காணப்பட்ட நபருக்கு 5 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டிருந்த முன்னாள் பொலிஸ் அதிகாரிகள் இருவருக்கும் தலா 3 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ச-இ)

# வடக்கு மக்களின் நம்பிக்கையை அரசாங்கம் கட்டியெழுப்பும்!

## அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவிப்பு

வடக்கு மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்த நம்பிக்கையை முழுமையாகப் பாதுகாப்பதுடன், நாட்டில் மீண்டும் ஒருபோதும் இனவாத அல்லது மதவாத மோதல்கள் ஏற்பட இடமளிக்கப்போவதில்லை என பொதுநிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார். பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வடக்கு பிராந்திய ஆவணக் காப்பகத்தை வவுனியாவில் திறந்துவைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் வடக்கின் கடுமையான குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், யுத்தத்தால் இழக்கப்பட்ட காணி உரிமைகளை மீள வழங்கும் திட்டமும் தயார் செய்யப்படுகிறது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காகப் புதிதாக 13,000 வீடுகளைக் கட்டுவதற்கான திட்டம் கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளது. ஒட்டுமொத்த அரச சேவையிலும் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் நிர்வாக சேவைக்கு 2,000க்கும் மேற்பட்டோரையும், கல்வித்துறைக்கு 30,000 ஆசிரியர்களையும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த தேர்தல்களில் வடக்கு மக்கள் எம்மீது வைத்த நம்பிக்கையை 100 வீதம் பாதுகாப்போம். அனைத்து இன மக்களும் இணைந்து வாழும் சூழலை உருவாக்குவதே எமது இலக்கு - என்றார். (ச-இ)

# சுயாதீன நீதித்துறைக்கு அரசாங்கம் அச்சுறுத்தல்

## சந்திம வீரக்கொடி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.1

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிக்கும் அரசாங்கத்தின் முன்மொழிவு நாட்டின் சுயாதீன நீதித்துறைக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் சட்டத்தரணியுமான சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்குவதைத் தடுக்க வேண்டுமானால், நீதவான் நீதிமன்றங் கள், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும். கீழ் நீதிமன்றங்களின் நீதிபதிகள், பணியாளர்களின் எண்ணிக்கையையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்துவதே சரியான தீர்வாகுமே தவிர, உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பதவிக் காலத்தை நீடிப்பது அல்ல.

தற்போதுள்ள நீதிபதிகள் அனைவரும் 65 வயதில் ஓய்வுபெறும் வகையிலேயே நியமனக் கடிதங்களைப் பெற்றுள்ளனர். எனவே, புதிய திருத்தத்தைக் கொண்டுவந்து 65 வயதில் ஓய்வுபெற ஒப்புக்கொண்டவர்களின் வயதை 67 ஆக நீடிப்பது சட்டரீதியாக சாத்தியமற்றது- என்றார். (ச-இ)

## நீதிபதிகளின்...

வித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைவாக விசாரித்து மக்களை வழக்குச் சுமைகளில் இருந்து விடுவிப்பதே எமது பிரதான நோக்கமாகும். அண்மையில் நடைபெற்ற இரு தேர்தல்களின்போதும் இதற்காகவே மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளனர்.

இதன் ஓர் அங்கமாகவே நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதெல்லையை இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு உத்தேசித்துள்ளோம். இதன் மூலம் மக்களுக்கு நன்மைகளே கிடைக்கப்பெறும். மைத்திரி ரணில் ஆட்சிக் காலத்திலும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வுபெறும் வயதை நீடிப்பதற்கு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. எனவே இதுவொன்றும் புதிய முயற்சி அல்ல. அரசாங்கத்தின் நிலைப்பாட்டிலேயே மக்களும் உள்ளனர். ஆனால் வழக்குகள் நிலுவையில் உள்ள சிலரே பதற்றமடைகின்றனர் - என்றார். (அ-ம)

## பூஜித,...

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்தஞாயிறுத் தினத்தன்று தென்னிலங்கையில் உள்ள ஆலயங்கள் மற்றும் ஆடம்பர விடுதிகளில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் 269 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் 500க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இந்த வழக்கை ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீள விசாரித்து வருகின்றது.

முன்னாள் பொலிஸ்மா அதிபரான பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ இருவரும் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களுக்கு எதிராகத் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

முன்னாள் பொலிஸ்மா அதிபரான பூஜித ஜயசுந்தரவுக்கு எதிராக 857 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. அவற்றில் உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுக்கு உடந்தையாக இருந்தமை, உயிர்த்தஞாயிறுத் தாக்குதலைத் தடுக்கத் தவறியமை உள்ளிட்ட 854 குற்றச்சாட்டுகள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டன. அத்துடன், உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பான உளவுத் தகவல்கள் கிடைத்தும் தாக்குதலைத் தடுக்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டை முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ எதிர்கொண்டார்.

இருவருக்கும் எதிரான வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ இருவருக்கும் மரண தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (அ-ம)

## மோ.சைக்கிள்...

கொழும்பில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த சொகுசுப் பேருந்தும், யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியே இந்த விபத்து சம்பவித்துள்ளது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில், அவர் உடனடியாக மீட்கப்பட்டு புளியங்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் மேலதிக சிகிச்சையின் போது உயிரிழந்தார். மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-110)

## நிலங்களைக்...

அபிவிருத்திக்குழு சாடியுள்ளது. இது தொடர்பில் வலி.வடக்கு மீள்குடியேற்ற அபிவிருத்திக்குழு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

மக்களின் காணிகள் மக்களிடம் வழங்கப்படும் என்பதே அரசின் வாக்குறுதியாகும். எமது காணிகளை எம்மிடம் வழங்க வேண்டும் என்றே நாமும் கோரி வருகின்றோம். ஆனால், எமது விருப்பத்துக்கு முரணான வகையில் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ள நிலங்களுக்கு இழப்பீடு வழங்கும் சதியை அரசின் ஏவுதலுடன் சில அரச அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். இந்தச் சதியின் ஒரு கட்டமாக எதிர்வரும் 4ஆம் திகதியன்று தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் இழப்பீடு வழங்குவதற்கான கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அழைக்கப்படும் மக்களிடம் ஏதோ ஒரு வகையில் சம்மதத்தைப் பெற்று, அவர்களின் காணிகளை நிரந்தரமாகக் கபளீகரம் செய்யவே தற்போதைய அரசாங்கம் அரச அதிகாரி கள் மூலம் தீவிரமாக முயற்சிக்கின்றது. இராணுவப் பிடிகளுக்குள் இருக்கும் தமது நிலங்களை நிபந்தனையின்றி விடுவிக்குமாறுகோரி மயிலிட்டி மக்கள் தொடர்ந்து 15 வாரங்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மக்களின் இந்த நியாயமான போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும் அரசாங்கத்தின் சதி கடும் கண்டனத்துக்கு உரியது.

அரசாங்கத்தின் சதிச் செயல்களுக்கு எதிராக நாங்கள் உறுதியாகப் போராட வேண்டும். விட்டுக்கொடுப்பு இல்லாமல் மேற்கொள்ளப்படும் போராட்டத்தின் மூலம் மட்டுமே எமது நிலங்களைப் பாதுகாக்கவும் தக்க வைக்கவும் முடியும் - என்றுள்ளது. (அ-ம-27)

## இராணுவத்...

ரல் லசந்த ரொட்ரிகோ ஓய்வுபெற்றுள்ள நிலையிலேயே புதிய தளபதியாக லெப்டினன் ஜெனரல் நிலந்த பிரேமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

1990ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தில் அதிகாரிகளுக்கான பயிற்சிப் பிரிவில் இணைந்த நிலந்த பிரேமரத்ன, இராணுவ ஊடகப் பணிப்பாளராகவும், இராணுவப் பேச்சாளராகவும், பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரி அலுவலகத்தின் தலைமை அதிகாரியாகவும், கிழக்கு பிராந்தியப் பாதுகாப்புப் படைகளின் கட்டளை அதிகாரியாகவும், இலங்கை இராணுவத்தின் ஜெனரலாகவும் பணியாற்றியுள்ளார்.

அத்துடன், சீனா, பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் உயர்மட்ட தொழில்முறை இராணுவப் பயிற்சிகளையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இயக்குநர் சோமீதரனின் தாயார் உடல்நலக் குறைவால் மறைவு

யாழ்ப்பாணம், ஓக. 1

தென்னிந்தியாவில் வெளியான நீளிரா, யாழ். நூலக எரிப்புத் தொடர்பான ஆவணப் படமான 'எரியும் நினைவுகள்' ஆகியவற்றின் இயக்குநரான சி.சோமீதரனின் தாயார் சி.சாரதாதேவி (வயது-75) திடீர் உடல்நலக் குறைவு காரணமாக நேற்றுமுன்தினம் காலமானார்.

அவரின் உடலுக்கு திரைத்துறையினர், அரசியற் தலைவர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அவரின் இறுதிச்சடங்கு சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு, கந்தசாமி கோவிலடியிலுள்ள அவரின் இல்லத்தில் நாளை காலை 9 மணியளவில் நடைபெறும் என்று குடும்பத்தினர் அறிவித்துள்ளனர். (அ-ம-26)

## அனுமதியற்ற...

றத்தின் யாழ்ப்பாண அமர்வு தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

சுதுமலை அம்மன் கோவில் திருப்பணி வேலைகள் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் அனுமதிகளின்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிட்டு ஐந்து தனிநபர்களால் வடமாகாண மேல் நீதிமன்றத்தின் யாழ்ப்பாண அமர்வில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

மனுதாரர்கள் தமது மனுவில் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானங்கள் உடனடியாக இடித்தழிக்கப்பட வேண்டுமென்றும், கோவில் திருப்பணிகள் தொடர்ந்து இடம்பெறக் கூடாதென இடைக்காலக் கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டுமென்றும் கோரியிருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் முன்னிலையாகியிருந்தார். நான்காம், ஐந்தாம், ஆறாம் எதிர்மனுதாரர்களான கோவில் அறங்காவலர் சபையின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் சார்பில் சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் முன்னிலையாகியிருந்தார்.

விசாரணையின் போது எதிர்மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன், கட்டுமான அனுமதி தொடர்பிலான வழக்குகளை விசாரிக்கும் நியாயாதிக்கம் நீதவான் நீதிமன்றத்திடமே உள்ளது என்றும், அதனை மேல் நீதிமன்றம் பிரயோகிக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

அனுமதியற்ற கட்டடங்கள் என்றாலும் கூட அவற்றை இடித்தழிக்குமாறு கட்டளையிடுவதற்கான நியாயாதிக்கம் மேல் நீதிமன்றத்துக்கு இல்லை எனத் தெளிவுபடுத்தினார். மேலும், எழுத்தாணை மனு வழக்கொன்றில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கோ அல்லது இல்லாதொழிப்பதற்கோ விண்ணப்பிக்க முடியும் என்றும், ஆனால் இந்த வழக்கைப் பொறுத்தவரை பிரதேச சபையால் இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படாத நிலையில், மனுதாரரால் செய்யப்பட்ட விண்ணப்பம் முன்முதிர்வானது என்றும் வாதிட்டார்.

எனவே, இடைக்காலக் கட்டளைகளை நிராகரிப்பது மட்டுமன்றி, எதிர்மனுதாரர்களுக்கு முறைசார் அறிவித்தல் அனுப்ப வேண்டிய வழக்கொன்று மனுதாரர்களால் விண்ணப்பிக்கப்படவில்லை என்பதனையும் கருத்திற்கொண்டு, வழக்கை நீதிமன்றம் முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் எனச் சட்டத்தரணி கு.குருபரன் வலுவான சமர்ப்பணங்களை முன்வைத்தார். சமர்ப்பணங்களை முழுமையாக ஏற்றுக்கொண்ட வடமாகாண மேல் நீதிமன்றம், மனுதாரர்களின் இடைக்காலக் கட்டளைக்கான விண்ணப்பத்தை நிராகரித்ததுடன், வழக்கையும் முழுமையாகத் தள்ளுபடி செய்து கட்டளையிட்டது. (அ-ம-26)

## முல்லைத்தீவு,...

விப்பு இடம்பெறும் - இவ்வாறு பாதுகாப்புப் பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர தெரிவித்தார்.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவப் பயன்பாட்டிலுள்ள காணிகளை விடுவிக்கும் விசேட கலந்துரையாடல், முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பிரதியமைச்சர் அருண ஜெயசேகர மேலும் தெரிவித்ததாவது:-

தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே நாட்டின் 25 மாவட்டங்களிலும் முப்படையின் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாட்டில் ஏற்படும் அசாதாரண மற்றும் இடர் நிலைமைகளின் போது பொலிஸாருடன் இணைந்து முப்படையினர் களப் பணியாற்றுகின்றனர். போர் நிறைவுற்ற 2009ஆம் ஆண்டிலிருந்து 2024ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை 9 ஆயிரத்து 480 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. எமது அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், இந்த ஆண்டு ஜூன் மாதம் வரை 615 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் மூலம் மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம். முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல், கேப்பாபிலவு உள்ளிட்ட பகுதிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் சில இடங்களிலும் மிக விரைவில் காணி விடுவிப்பு இடம்பெறும் - என்றார்.

இதையடுத்து, கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சு.முரளிதரனால் கனகாம்பிகைக்குளத்தில் காணி விடுவிப்புக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இராணுவ முகாமின் வேலியை 10 மீற்றர் தூரம் பின்னோக்கி நகர்த்துவதன் மூலம் 3 குடும்பங்களுக்குச் சொந்தமான ஒன்றரை ஏக்கர் காணியை விடுவிக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டினார். இதனைச் சாதகமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாகப் பாதுகாப்பு பிரதியமைச்சர் தெரிவித்தார்.

திருவிழாக் காலங்களில் கனகாம்பிகைக்குள முகாம் அமைந்துள்ள வீதியைப் பொதுமக்கள் பயன்படுத்த அனுமதிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையையும் பிரதியமைச்சர் ஏற்றுக்கொண்டார். மேலும், அந்தப் பகுதியில் இராணுவக் கட்டடத்துடன் உள்ள காணியை விடுவிப்பதற்கு இராணுவத்தினரால் 8.5 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ள நிலையில், கோயில் நிர்வாகத்தால் அந்தத் தொகையைச் செலுத்த முடியாதிருப்பதை மாவட்டச் செயலாளர் சுட்டிக்காட்டியதையடுத்து, அதனை மீள்பரிசீலனை செய்யவும் பிரதியமைச்சர் இணக்கம் தெரிவித்தார். கடந்த மே மாதம் பாதுகாப்பு பிரதியமைச்சரால் பார்வையிடப்பட்ட இயக்கச்சியிலுள்ள காணியை இன்னும் 3 மாதங்களுக்குள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத்தினர் இதன்போது தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.திலகநாதன், வன்னிப் பிராந்தியக் கட்டளைத் தளபதி, கிழக்கு கடற்படைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர், மேலதிக மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள், பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-113)

## ஊடகப்...

யுறுத்தி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் கௌசல்யா ஆரியரத்ன, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கிலும் கலந்துகொண்டார். இந்தச் செயலமர்வை புறக்கணித்த ஊடகவியலாளர்களே, ஊடகப் படுகொலைகள், ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்களுக்கு நீதி கோரியும் விசாரணைகளை வலியுறுத்தியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களை நேரில் சந்திப்பதை பிரதி அமைச்சர் தவிர்த்தார். அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர், யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளே ஊடகவியலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதில் உடன்பாடுகள் எட்டப்படாத நிலையில் ஊடகவியலாளர்களின் போராட்டம் தொடர்ந்தது. (அ-ம-26)

## 389...

தகவல்களை வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

**பின்னணி**

வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் 1994ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டுவரை தொண்டர் அடிப்படையில் பணியாற்றிய 389 சுகாதாரப் பணியாளர்களுக்கு வடமாகாணத்தால் நடத்தப்பட்ட இரண்டு நேர்முகத் தேர்வுகளின் பின்னர் சுகாதார சேவை உதவிப் பணியாளர்கள் என்ற அடிப்படையில் 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதிமுதல் அமுலாகும் வகையில் நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. அத்துடன், அன்றைய தினமே அவர்களை அவர்களது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் அறிக்கையிட்டு குறித்து ஒதுக்கிய சேவைநிலையங்களில் கடமைகளை ஆரம்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. நியமனத்தைப் பெற்ற 389 சுகாதாரப்பணியாளர்களும் 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதியன்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு அறிக்கையிடச் சென்றபோது அவர்கள் தற்போது பணியை ஆரம்பிக்க முடியாது என்றும், அந்த நியமனம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது எனவும் வாய்மூலமாக அறிவிக்கப்பட்டது. இதன்பின்னர், குறித்த நியமனம் திறைசேரியின் சுற்றறிக்கையின் அடிப்படையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன் குறித்த சுற்றறிக்கையானது மீளவும் திறைசேரியின் செயலாளரால் 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கையால் ரத்துச் செய்யப்பட்டது.

**வழக்கு**

இதையடுத்து தமக்கு நீதிகோரி குறித்த சுகாதாரப் பணியாளர்கள் வழக்குத் தொடர்ந்திருந்தனர். இந்த வழக்கு கடந்த மாதம் 10ஆம் திகதியன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது குறித்த மனுதாரர்களான சுகாதாரப் பணி உதவியாளர்கள் தங்களது நியமனத்துக்கான சட்டபூர்வமான உரித்துடையவர்கள் என்பதை முகத்தோற்றளவில் மன்று ஏற்றுக்கொண்டது. இதையடுத்து ஆட்சேபனைக்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கடந்த 22ஆம் திகதி திகதியிடப்பட்டதுடன் நேற்று விவாதத்துக்கு அழைக்கப்பட்டிருந்தது.

நேற்று வழக்கு அழைக்கப்பட்டபோது மனுதாரர்கள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணிகளான ரணித்தா ஞானராஜா, மரியதாஸ் யூட் டினேஸ் மற்றும் சட்டத்தரணி ஜோர்ஜ் இம்மானுவேல், சட்டத்தரணி ஜெயபாலசிங்கம் நிஷாந்தன் ஆகியோர் சட்டத்தரணி தியாகலிங்கம் டிலக்சனாவின் நெறிப்படுத்தலின் கீழ் முன்னிலையாகினார்கள். பிரதிவாதிகள் சார்பாக சிரேஷ்ட அரச சட்டத்தரணி நயோமி கஹவிட முன்னிலையாகியிருந்தார். அத்துடன் வடமாகாண சபையை பிரதிநிதித்துவம் செய்து மேலதிக செயலாளர் சுரேந்திரனும் மன்றில் தோன்றியிருந்தார். இதன்போதே, வடமாகாண சுகாதரப்பணி உதவியாளர்களாக நியமனம் வழங்கப்பட்டு, பின்னர் அந்த நியமனங்கள் ரத்துச் செய்யப்பட்ட 389 பேரினதும் முழுமையான தகவல்களை வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. அத்துடன் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (அ-ம-26)

## எரிபொருள்...

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்துக்கு அமைய ஓகஸ்ட் மாதத்தில் எரிபொருள் விலையில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்பட மாட்டாது. உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்து, அது நிலையான தன்மையில் பேணப்பட்டால் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

மத்திய கிழக்கில் தற்போதுவரை போர் முடிவுக்கு வரவில்லை. இதனால் எரிபொருள்களின் விலையில் உறுதியற்ற நிலையே காணப்படுகின்றது. இதனாலேயே ஓகஸ்ட் மாதத்துக்கான விலைகளை மாற்றமின்றித் தொடரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

இதன்படி, ஒக்ரேன் 92 ரக பெற்ரோலின் விலை 414 ரூபாவாகவும், ஒட்டோ டீசலின் விலை 382 ரூபாவாகவும், ஒக்ரேன் 95 ரக பெற்ரோலின் விலை 495 ரூபாவாகவும், சுப்பர் டீசலின் விலை 478 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் விலை 285 ரூபாவாகவும் பேணப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# கண்ணகியம்மன் துறைமுக வீதியை அகலப்படுத்தும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.1

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை கண்ணகி அம்மன் துறைமுக வீதியை அகலப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து, கண்ணகி அம்மன் பாலத்தைப் புனரமைக்கும் பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பணிகள் நிறைவடைந்த பின்னர், துறைமுகத்துக்கான வாகனப்போக்குவரத்தும், பொதுமக்களின் பயணமும் பாதுகாப்பாகவும், வசதியாகவும் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பாலத்தின் ஊடாக எழுவைதீவு, அனலைதீவு பிரதேச மக்கள் தமது அன்றாட தேவைக்காகப் பயணித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சு-25)



கதிர்காம ஆலய தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு, திருக்கேதீஸ்வரத்தின் புனிதபாலாவி தீர்த்தக் கரையில், சுவாமி தீர்த்தமாடி அருள்பாலித்தார். (க)


## காணி விற்பனைக்கு

- இடம் : செழியன் வீதி, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்
- யாழ். நகர் மத்தியில் இருந்து 1 1/2 KM தூரத்தில் உள்ளது.
- 18 பரப்பு அளவுடையது.
- பிரித்தும் வழங்கப்படும்.
- நல்ல அயல் சூழல்
- பரப்பு ஒன்றின் விலை - 18 இலட்சம்

தொடர்புகளுக்கு: 076 6690 996
076 8828 694

(CS/61990) J-1




தேசிய 'நேர்மை வாரத்தை' முன்னிட்டு அரச சேவையின்வினைத்திறனான பங்களிப்புடனான டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் ஊர்காவற்று றைப் பிரதேசத்தில், டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவாக உள்ள சூழல் காரணிகள் இனங்காணப்பட்டு ஊர்காவற்றுறைப் பிரதேசசபை உத்தியோகத்தர்களால் துப்புரவு செய்யப்பட்டது. (ச-9)


## காணி விற்பனைக்கு

**யாழ் சுண்டுக்குளி மோரிஸ் ஒழுங்கையில் புதிதாக பிரிக்கப்பட்ட காணித் துண்டுகள்**

- கொழும்புத்துறை சாலைக்கு மிக அருகில்
- சிறந்த சூழல்
- அகலமான சாலை - 15 அடி & 20 அடி
- UDA அங்கீகரிக்கப்பட்டது
- உடனடி கட்டிடம் சாத்தியம்
- 1.4 பரப்பு X 6* துண்டுகள் (1ப 7கு)
- 1.33 பரப்பு X 2* துண்டுகள் (1ப 6கு)
- ஸ்ட்ரீன்லைன் சான்றிதழ்
- உரிமைச் சான்றிதழ்
- கையலிக்கபடாமைக்கான நற்சாட்சி சான்றிதழ்
- மின் இணைப்புக்கான அணுகல்

**சில துண்டுகள் ஏற்கனவே விற்கப்பட்டுள்ளன. தரகர்கள் தேவையில்லை.**

தொடர்புகளுக்கு:-
077 349 5091, 077 711 5438

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோப்பாய் வடக்கு 7 1/2 பரப்புக்காணி 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 05 துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

- நல்ல சூழல்
- நண்ணீர் ஊற்று
- யாழ்ப்பாணத்திலிருந்து 6 km
- பருத்தித்துறை வீதி 1 km
- இராச வீதி 800m
- உரும்பிராய், கைதடி செல்லும் பிரதான வீதியிலிருந்து 500m தூரம்.
- சிரட்டை கொம்பனி அருகாமையில்
- தரகர் தேவையில்லை.

T.P: 077 6234 204
077 0654 525


## மரண அறிவித்தல்



தோற்றம்
08 . 11 . 1950

மறைவு
31 . 07 . 2026

### அமரர் பேரின்பஜானகி பாலேந்திரன்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் (1989 - 1998), ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் ஆரம்பக்கல்வி - யாழ் கல்வி வலயம்)**

அநுராதபுரத்தை பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம், சரவணை மற்றும் யாழ்ப்பாணம் கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பேரின்பஜானகி பாலேந்திரன் அவர்கள் நேற்று (31.07.2026) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - மீனாட்சி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - செல்லக்கண்ணு தம்பதியரின் அன்பு மருமகளும், திரு.பாலேந்திரன் (ஓய்வுபெற்ற அதிபர் சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்) அவர்களின் பாசமிகு மனைவியும், Dr துவாரகா (கொழும்பு), கல்பனா (ஆசிரியர் - கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்), ஜனகன் (லண்டன்), பிரதீபா (அவுஸ்ரேலியா), நிரூஜன் (கொழும்பு), நிரூஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திரசேகர், தட்சயா (லண்டன்), கிரிதர்ஷன் (அவுஸ்ரேலியா), Dr.ஆரணிகா (கொழும்பு), மாலவன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சாயிரமணா, விஷ்ணிகா, மயூரிகன், விசாகன், அக்ஷரா, ஹர்ஷிதா, இலட்சியன், நிலானி, கதிரவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், குபேரநாதன், சிவநாதன், மகேஸ்வரி, இரகுநாதன், லோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருஞானசம்பந்தர், கஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.164, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
பாலேந்திரன்
077 966 4118

(CS/61995) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.08.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media